## நவம்பர் – 08 – வியாழன்

**புனித காட்ப்ரே**

**அவருக்குப் பாடல் பாடுங்கள்: அவரைப் புகழ்ந்தேத்துங்கள்! திபா. 105:2**

**முதல் வாசகம் : பிலிப்பியர் 3 : 3 – 8**

சகோதர சகோதரிகளே! ஏனெனில், உடலைச் சார்ந்தவற்றில் உறுதியான நம்பிக்கை கொள்ளாமல், கடவுளின் ஆவிக்கேற்ப வழிபட்டுக் கிறிஸ்து இயேசுவைப் பெருமைப்படுத்தும் நாமே உண்மையான விருத்த சேதனம் செய்து கொண்டவர்கள் .உடலைச் சார்ந்தவற்றில் உறுதியான நம்பிக்கை வைக்க வேண்டுமானால் நானும் வைக்கலாம். உடலைச் சார்ந்தவற்றில் உறுதியான நம்பிக்கை கொள்ளமுடியும் என யாராவது நினைத்தால், அவரைவிட மிகுதியாக நானும் நம்பிக்கை கொள்ள முடியும்.நான் பிறந்த எட்டாம் நாள் விருத்தசேதனம் பெற்றவன். இஸ்ரயேல் இனத்தவன் பென்யமின் குலத்தவன். எபிரேயப் பெற்றோருக்குப் பிறந்த எபிரேயன். திருச்சட்டத்தைக் கடைப்பிடிப்பதில் பரிசேயன்.திருச்சட்டத்தில் எனக்கிருந்த ஆர்வத்தால் திருச்சபையைத் துன்புறுத்தினேன். திருச்சட்டத்தின் அடிப்படையிலான நீதிநெறியைப் பொறுத்தமட்டில் குற்றமற்றவனாய் இருந்தேன்.ஆனால் எனக்கு ஆதாயமான இவை அனைத்தும் கிறிஸ்துவின்பொருட்டு இழப்பு எனக்கருதினேன்.உண்மையில், என்னைப் பொறுத்தமட்டில் என் ஆண்டவராம் கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவே நான் பெறும் ஒப்பற்ற செல்வம். இதன் பொருட்டு மற்ற எல்லாவற்றையும் இழப்பாகக் கருதுகிறேன். அவர் பொருட்டு நான் அனைத்தையும் இழந்து விட்டேன். கிறிஸ்துவை ஆதாயமாக்கிக்கொள்ள எல்லாவற்றையும் குப்பையாகக் கருகிறேன்.

**பதில்பாடல் :** ஆண்டவரைத் தேடுவோரின் இதயம் மகிழ்வதாக.

**நற்செய்தி : லூக்கா15 : 1 - 10**

அக்காலத்தில், வரிதண்டுவோர், பாவிகள் யாவரும் இயேசு சொல்வதைக் கேட்க அவரிடம் நெருங்கிவந்தனர்.பரிசேயரும், மறைநூல் அறிஞரும், ”இவர் பாவிகளை வரவேற்று அவர்களோடு உணவருந்துகிறாரே” என்று முணுமுணுத்தனர்.அப்போது அவர் அவர்களுக்கு இந்த உவமையைச் சொன்னார். ”உங்களுள் ஒருவரிடம் இருக்கும் நூறு ஆடுகளுள் ஒன்று காணாமற் போனால் அவர் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் பாலை நிலத்தில் விட்டுவிட்டு, காணாமற் போனதைக் கண்டுபிடிக்கும் வரை தேடிச்செல்ல மாட்டாரா?கண்டுபிடித்ததும், அவர் அதை மகிழ்ச்சியோடு தம் தோள்மேல் போட்டுக் கொள்வார். வீட்டுக்கு வந்து, நண்பர்களையும் அண்டை வீட்டாரையும் அழைத்து, ”என்னோடு மகிழுங்கள் ஏனெனில் காணாமற்போன என் ஆட்டைக் கண்டுபிடித்து விட்டேன்” என்பார்.அதுபோலவே மனம் மாறத தேவையில்லாத் தொண்ணூற்றொன்பது நேர்மையாளர்களைக் குறித்து உண்டாகும் மகிழ்ச்சியை விட, மனம்மாறிய ஒரு பாவியைக் குறித்து விண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்.”பெண் ஒருவரிடம் இருந்த பத்துத் திராக்மாக்களுள் ஒன்று காணாமற் போய்விட்டால் அவர் எண்ணெய் விளக்கை ஏற்றி வீட்டைப் பெருக்கி அதைக் கண்டுபிடிக்கும்வரை கவனமாகத் தேடுவதில்லையா?கண்டுபிடித்ததும், அவர் தோழியரையும் அண்டை வீட்டாரையும் அழைத்து, ”என்னோடு மகிழுங்கள், ஏனெனில் காணாமற் போன திராக்மாவைக் கண்டுபிடித்துவிட்டேன்” என்பார். அவ்வாறே மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்துக் கடவுளின் தூதரிடையே மகிழ்ச்சி உண்டாகும் என உங்களுக்குச் சொல்கிறேன்” என்றார்.

**தியானம்:** இயேசு யாரைத் தேடி வந்தார் கடவுளிடமிருந்து அகன்று செல்வோர் யாராயிருந்தாலும் அவர்களுக்கு வாழ்வளிக்கவே இயேசு வந்தார். ஆனால் சிலவேளைகளில் சில மனிதர்கள் தங்களுடைய உண்மையான நிலையை மறந்து போகின்றார்கள். கடவுளின் முன்னிலையில் தாங்கள் நல்லவர்கள் என இவர்கள் இறுமாப்புக் கொள்வதோடு பிறரையும் குறைகூறுவதிலும் பிறர் பாவிகள் என குற்றம் காட்டுவதிலும் இவர்கள் வழக்கமாகும். ஆனால் இயேசுவின் போதனைப்படி நாம் எல்வோருமே கடவுளின் இரக்கத்தை நம்பி வாழ வேண்டியயவர்கள். நமக்கு கடவுளின் உதவி தேவை இல்லை என நாம் கூற முடியாது. ஏனெனில் நாம் எல்லோருமே மந்தையை விட்டு அகன்று போகின்ற ஆட்டுக்குட்டிக்கு ஒப்பானவர்கள். நம்மை தேடி வருகின்ற அன்பு மிக்க கடவுள் நம்மை கண்டுபிடித்து நம் மீது நம் அன்பைப் பொழிகின்றார் என்னும் உண்மையை நாம் ஏற்று வாழ வேண்டும். தொண்ணூற்றுறொன்பது ஆடுகள் தம்மோடு இருந்தபோதிலும் அவற்றை எல்லாம் விட்டு விட்டு காணாமல் நூறாவது ஆட்டினைத் தேடி செல்கின்ற ஆயன் உண்மையிலேயே அந்த ஆட்டின்மீது அளவு கடந்த அன்பு கொண்டிருக்க வேண்டும். இதுவே கடவுள் பாவிகள் மீது காட்டுகின்ற அன்பு. அதாவது பாவிகளாகிய நம் மீது அவர் காட்டுகின்ற அன்புக்கு அளவு கிடையாது. கடவுளின் அன்பு கடலின் விரிவை விட மிக பரந்தது. அந்த அன்பின் ஆழத்தை அளந்திட மனித அறிவினால் இயலாது. எனவே அளவு கடந்த விதத்தில் நம்மை அன்பு செய்யும் கடவுளை விட்டு பிரியாமல் அவருடைய அன்பில் நாம் என்றும் நிலைத்திருக்க வேண்டும் என்பதே கடவுள் நமக்கு விடுக்கின்ற அழைப்பாகும் ஆமென்.